## *DEPOSITION OF WITNESS*
## ***(Chapter XXV BNSS)***

## ***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
## ***CC.No. 121/2025 – P.W. 1(LW 1)***

| | |
|---|---|
| *Name* | பாக்யராஜ் |
| *Father/Husband's Name* | த/பெ. தம்புசாமி |
| *Village* | திருக்களார் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *43* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், எனது ஊர்க்காரர்.

2) கடந்த 2022 ஆம் வருடம் இரவு 9.00 மணியளவில் நான் திருப்பூர் செல்வதற்காக கிளம்பிக்கொண்டிருந்தபோது எங்கள் தெருவில் சிலருக்கிடையே தகராறு ஏற்பட்டது. நான் வேடிக்கை பார்க்க சென்றபோது நடந்த தள்ளுமுள்ளுவில் நான் கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாலும், சம்பவம் இருட்டு நேரம் என்பதாலும் அவர்கள்தான் தாக்கியிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் மனு அளித்து விட்டேன்.

3. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் **அசாஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரிகளுடன் சமரசம் செய்துக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிரிகள் என் ஊர்க்காரர்கள் என்ற முறையில் சமரசம் செய்துக் கொண்டுள்ளேன் என்றால் - சரிதான். (சமரச மனுவில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

2. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 01.11.2022 ஆம் தேதி இரவு 9.00 மணியளவில் திருப்பூர் செல்வதற்காக நான் கிளம்பி வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அவரது வீட்டு வாசலில் குறுக்கே வண்டியை போட்டு என்னை மறைத்து நான் அந்த வண்டியை தள்ளி வைக்க முற்பட்டபோது என்னை தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி, கீழே தள்ளி அடித்து கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் சம்பவம் குறித்து எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையத்தில் புகார் மனு அளித்து விட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.